www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி





# எதுவும் சாத்தியம்

ஞானம் 6 - ஒலி 26- 25.07.2023

# நம்பிக்கையே நமக்கு நல்வாழ்வைத் தரும்





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

அன்பிற்கினிய எனதருமைச் சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்களும் உங்களின் அன்புக்குரியவர்களும் எல்லா நலமும், வளமும் பெற்று நீடுவாழ என் செபங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். வாழ்க வளமுடன், நலமுடன்.

சிந்தனையில் தெளிவும், செயலில் உறுதியும், செய்ய வேண்டியதைச் செய்து முடிக்க வேண்டும் என்ற திடமும், அதைச் செய்து முடிக்கும் வரை தொடரும் முயற்சியும் ஒருவருக்கு இருந்தால் அவரைச் செயல்வீரர் என்று இந்த உலகம் மதிக்கும். அவர் சொன்னார்னா, அவர் நிச்சயம் செய்வார் என்று அவர் மீதான் நம்பிக்கையை வெளியிடுவார்கள். அவர்ட ஒரு காரியத்தை செய்யச் சொல்லிட்டு நாம வேறு வேலைய நிம்மதியா பாக்கலாம். ஏன்னா, அது செஞ்சு முடிச்ச மாதிரிதான். என்று உறுதியாய்ச் சொல்வார்கள்.

அப்படிப்பட்ட ஒரு குணம் எல்லோருக்கும் வாய்க்காது. அது சாதாரணமாக ஒருவருக்கு வந்துவிடாது. அப்படிப்பட்ட செயல்வீரத்தன்மை பழக்கத்தினாலும், நற்பண்பினாலுமே வரும்.

அதைத்தான் நம் அருள்நாதர் இயேசுவின் வாழ்வில் பார்க்கின்றோம். பரிசுத்தப் பரலோகத் தந்தை அவர்கள் தன் மகன் இயேசுவிடம் மக்களின் மீட்புப்பணியை ஒப்படைத்தது இந்த நம்பிக்கையால்தான். இயேசு இறுதி நேரத்தில், மனித பலவீனத்தால் பின்வாங்க நினைத்தபோதும், அதற்காக மன்றாடியபோதும் பரலோகத்தந்தை தன் மகனின் மனவுறுதியை நன்கே அறிந்திருந்ததால், இறுதி முடிவை அவரே எடுக்க விட்டுவிட்டார். அத்தருணத்தில் இயேசுவில் அந்தச் செயல்வீரத்தன்மை முழுமையாய் வெளிப்பட்டது. அதன்பிறகு நடந்தைத்தான் இந்தப் பிரபஞ்சமே அதிசயத்தோடு அறிந்து, ஆனந்தக் கண்ணீரோடும் நன்றியோடும் அவரை இன்றுவரை ஆராதித்துக் கொண்டிருக்கின்றது. இயேசுவின் நாமத்திற்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிட்டுள்ளதோடு, இருகரம் கூப்பி அவரது நாமத்திற்கு துதி பாடிக்கொண்டிருக்கின்றது. இயேசு என்றால் சும்மாவா?

ஆயிரம், லட்ச தெய்வங்கள் வந்தாலும் அவர்முன் அவையும் மண்டியிடும், மண்டியிட்டுத்தான் ஆகவேண்டும்.

உண்மையும், நம்பிக்கையும், அன்பும் எவரிடம் இருக்கின்றதோ....அவர்களில் இயேசுவன்றி வேறு யாரும் இருக்க முடியாது.

அப்படிப்பட்டவர்களில்தான் அந்த உண்மையும், நம்பிக்கையும், செயல்வீரத்தன்மையும் குடிகொண்டிருக்கும். அவர்களால்தான் எடுத்த காரியத்தை உயிரைக் கொடுத்தாவது செய்து முடிக்க முடியும்.

தெளிவானவர்களுக்கும், குழப்பவாதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் இதுதான். தெளிவற்றவர்களிடம் உண்மையும், நிதானமும், நம்பிக்கையும் இராது. இருவரும் ஒரு காரியத்தைத் ஒருங்கே துவங்குவார்கள்...ஆனால் இறுதிவரை நிலைத்து நிற்கக்கூடிய ஆற்றல் செயல்வீரர்களிடம்தான் இருக்கும்.

ஒருமுறை கன்ஃபூசியஸ் அவர்கள் தன் சீடர்களோடு ஓர் ஊர் வழியாக பயணம் செய்வதை அறிந்த அந்த ஊரைச் சேர்ந்த ஒருவர், அவரிடம் சென்று ஐயா, எங்கள் ஊரிலும் ஒரு ஞானி, அறிவாளி இருக்கின்றார். நீங்கள் விரும்பினால், அவரிடம் உங்களை அழைத்துச் செல்கின்றேன் என்று சொன்னார். அதற்கு கன்ஃபூசியஸ் அவரிடம், அவர் அப்படி என்ன பெரிய ஞானி, அறிவாளி? என்று கேட்டார். அதற்கு அந்த மனிதன், ஐயா, அவர் எந்த ஒரு காரியத்தையும் செய்வதற்கு முன் பத்துமுறை யோசித்துவிட்டுதான் செய்வார். அவ்வளவு முன்ஜாக்கிரதை என்று சொன்னார்.

அதைக் கேட்ட கன்ஃபூசியஸ் அவர்கள், அவரிடம், ஒருவர் ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன், முறையாக, நிதானமாக இருமுறை யோசித்தாலே போதும்...ஆனால் நீ சொல்லும் மனிதர், ஞானியுமல்ல, அறிவாளியுமல்ல...அவர் ஒரு குழப்பவாதி. பத்துமுறைக்குமேல் யோசிக்கும் அவர் தெளிவில்லாதவர். அதை உங்களுக்கும் போதித்து தன்னையும் குழப்பி, உங்களையும் குழப்புகின்றார். தான் கெட்டதோடு மட்டுமல்லாமல் ஊரையும் சேர்த்துக் கெடுக்கின்றார். அவரிடம் சற்று எச்சரிக்கையாக இருங்கள். அவரை நான் சந்தக்க விரும்பவில்லை என்று சொல்லிவிட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தாராம்.

ஆகவேதான் உம் பேச்சு ஆம் என்றால் ஆம் என்றும், இல்லை என்றால் இல்லை என்றும இருக்கட்டும் என்று இயேசு கற்றுக் கொடுக்கின்றார்.

செய்ய விரும்புகின்றவர் தெளிவாக தன் பணிகளை செவ்வனே செய்வார். விரும்பமில்லாதவர் அதைத் தவிர்க்க ஆயிரம் குறைகளையும், காரணங்களையும் தேடுவார்.

செய்றவங்க சொல்லமாட்டாங்க, சொல்றவங்க செய்யமாட்டாங்க என்றும், சொல்லிச் செய்யார் சிறியர், சொல்லாமலே செய்வார் பெரியோர் என்றும் நாம் சொல்லக் கேட்டிருக்கின்றோம்.

நாம் உதவி கேட்டு யோசிக்காமல், இதோ நான் செய்கின்றேன் என்று யாராவது சொன்னால்...அவர் நிச்சயமாக செய்ய மாட்டார். நம்மிடம் யாராவது மிகவும் சத்தமாக பேசி நம்மீதான அவரின் அன்பை வெளிப்படுத்துகின்றார் என்றால், . அவர் நிச்சயமாக டுபாக்கூராகத்தான் இருப்பார். அவர் நிச்சயமாக வேஷதாரிதான். அவர் நம்பத்தக்கவர் அல்ல.

நான் செபம் செய்தும் எதையும் இதுவரை கடவுள் செய்ததில்லையே? என்று பல தடவை நாம் அங்கலாய்த்திருப்போம். அது எல்லோருக்கும் இருக்கின்ற ஒரு ஏமாற்ற அனுபவம். அதில் ஓர் உண்மையை நாம் புரிந்துகொண்டோமென்றால் இத்தகைய அவசரமும், ஆதங்கமும் இராது.

நாம் எந்தக் காரியத்தையும் நமது விருப்பப்படி, நேரப்படி காலமறிந்து செய்வோம்...நாம் செபம் செய்து கடவுள் நமக்கான செயலை நம் நேர, விருப்பப்படி செய்ய வேண்டும் என எதிர்பார்ப்போம். அங்குதான் நாம், நமது, நான், என்ற தலைக்கனத்தை வெளிப்படுத்துவோம். கடவுளையே நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயலுவோம். அந்த செபத்திலும் தந்தை பிள்ளை என்ற உறவைவிட, வியாபாரத்தன்மையும், அகங்காரமும் மேலோங்கி நிற்பதை அறிவோம்.

செபத்தில் நம் தேவைகளை இறைவனிடம் கேட்பதோடு நாம் நிறுத்திக் கொள்ளவேண்டும். அவர் அவரின் நேரப்படி நமது தேவை அதன் காலம் அறிந்து சரியாக செயல்படுவார். அவர் செயல்படும் வரை நாம் காத்திருக்கும் செபம்தான் உண்மையான வலிமையான செபம்.


ஆகவேதான் புனித.பேதுரு முதல் திருமுகத்தில் 5ம் அதிகாரம் 6வது இறைவசனத்தில்...கடவுளது கைவண்மைக்குப் பணிந்து உங்களைத் தாழ்த்துங்கள், குறித்த காலத்தில் அவர் உங்களை உயர்த்துவார் என்று இதை வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்

ஆனானப்பட்ட இயேசு கிறிஸ்துவே, தனது மரணத்திற்குப் பிறகு, தந்தை செயல்பட்டு தன்னை உயிர்ப்பிக்கும் வரை மூன்று நாள் கல்லறையில் காத்திருந்தார். காரணம் அனைத்தும் அறிந்த தந்தை ஏற்ற காலத்தில் நம்மைப் பராமரிக்கின்றவர் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆமென்

96

# விவிலியம் அறிவோம்





## கோராகுவின் கிளர்ச்சியும் அதைத் தொடர்ந்துவரும் லேவியருக்கானச் சட்டங்களும்

இஸ்ரயேலின் தலைவர்களாக மோசே மற்றும் ஆரோன் செயல்படுவது ஒரு சிலருக்குப் பிடிக்கவில்லை. லேவி குலத்தைச் சார்ந்த ஒரு சிலரும் ரூபன் குலத்தைச் சார்ந்த ஒரு சிலரும் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுகின்றனர். அவர்களுக்குத் தலைவராக லேவியர் குலத்தைச் சார்ந்த கோராகு செயல்படுகிறார். இவர் திருஉறைவிடத்தின் புனிதப் பொருள்களை சுமக்கும் பொறுப்பைப் பெற்ற கோகாத்து குலத்தைச் சார்ந்தவர் (காண்களண் 7:9). கோராகுடன் ரூபன் குலத்தைச் சார்ந்த தாத்தான் மற்றும் அபிராம் இன்னும் கூட்டமைப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருநூற்றைம்பது தலைவர்கள் ஒன்றிணைந்து மோசேக்கு எதிராகவும் ஆரோனுக்கு எதிராகவும் குரலெழுப்புகின்றனர். அவர்கள் மோசேயையும் ஆரோனையும் நோக்கி நீங்கள் மிதமிஞ்சிப் போய்வீட்டீர்கள்; மக்கள் கூட்டமைப்பு முழுவதிலுமுள்ள ஒவ்வொருவரும் தூயவர்தாம்; ஆண்டவரும் அவர்களோடு இருக்கிறார்; அப்படியிருக்க ஏன் ஆண்டவரின் சபைக்கு மேலாக உங்களை உயர்த்திக் கொள்கிறீர்கள்? (எண் 16:3) என்கின்றனர்.

லேவியர் குலத்தைச் சார்ந்த கோராகும் ரூபன் குலத்தைச் சேர்ந்த தாத்தான் மற்றும் அபிராம் ஆகியோரும் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்வதற்கு என்ன காரணம் என்ற கேள்வி எழுகிறது. ஒரு சில காரணங்களை நாம் யூகிக்க முடியும். கோராகு லேவியர் குலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் ஆரோனின் மகன் அல்ல; திருத்தூயத்தில் அவர் பலிகள் ஒப்புக்கொடுக்க முடியாது. குருத்துவம் அனைத்து குலத்தினருக்கும்

பொதுவானதாக இருந்தால் நல்லது என அவர் நினைக்கிறார். லேவியர் குலம் குருத்துவக் குலம் என அழைக்கப்பட்டாலும் எல்லா லேவியர்களும் குருக்களாகத் திருத்தூயகத்தில் பணி செய்யமுடியாது. ஆரோனும் அவரது புதல்வர்களும் அவர்களின் வழிமரபினரும் மட்டுமே குருக்களாகத் திருத்தூயகத்தில் பணிபுரியமுடியும். இதை கோராகுவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே அவர் மோசே மீதும் ஆரோன் மீதும் பொறாமைகொண்டு அவர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறார்;.ரூபன் குலத்தினருக்கும் காரணங்கள் இருக்கின்றன. பண்டைய மேற்காசிய நாடுகளில் தலைமகன்கள்தான் தலைவர்களாக, குருத்துவப் பணியைச் செய்பவர்களாக இருந்தார்கள். இஸ்ரயேல் மக்கள் நடுவிலும் அந்தப் பழக்கம்தான் இருந்தது. சீனாய் மலை உடன்படிக்கையின்போது எல்லா குலத்திலும் உள்ள தலைமகன்கள்தான் குருத்துவப் பணியைச் செய்கின்றனர்; பலிகள் ஒப்புக்கொடுக்கின்றனர். இஸ்ரயேல் ஒரு கூட்டமைப்பாக மாறியபின் அந்தப் பழக்கம் மாறிவிட்டது. ரூபன் யாக்கோபின் முதல் மகன்; ஆனால் தலைமகனுக்குரிய உரிமைகள் அவனுக்குக் கிடைக்கவில்லை. இதனால் ரூபனின் வழிமரபினர் பொறாமைகொண்டு செயல்பட்டிருக்கலாம். மோசே ரூபன் குலத்தைச் சார்ந்த தாத்தானையும் அபிராமையும் பேச்சுவார்த்தைக்காக அழைக்கிறார். ஆனால் அவர்கள், நாங்கள் வரமாட்டோம்; இப்பாலைநிலத்தில் எங்களைக் கொல்லும்படி, பாலும் தேனும் வழிந்தோடும் நாட்டிலிருந்து எங்களைக் கொண்டுவந்து, இப்போது எங்கள்மேல் நீர் உம்மை அதிகாரியாக்கிக் கொள்வது அற்பமான காரியமா? மேலும் பாலும் தேனும் வழிந்தோடும் நாட்டிற்கு நீர் எங்களைக் கொண்டுவரவுமில்லை; திராட்சைத் தோட்டங்களை எங்களுக்கு உரிமைச் சொத்தாகக் கொடுக்கவுமில்லை; இம்மனிதர்களின் கண்களைப் பிடுங்கிவிடுவீரோ? நாங்கள் வரவேமாட்டோம் எனக்கூறி மோசேமீது குற்றம் சாட்டுகின்றனர். எகிப்து நாட்டை அவர்கள் பாலும் தேனும் வழிந்தோடும் நாடு எனக் கூறுகின்றனர். இதற்கு முன்னால் மக்கள் மோசேக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது எகிப்தில் அவர்கள் உண்ட விதவிதமான உணவுபற்றிப் பேசினர் (எண் 11:5) ஆனால் எகிப்தின் அடிமைத்தனத்தையும் அவர்கள் அங்கே கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டதையும் மறந்துவிட்டனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காக மோசே கோராகிடம் பேசுகிறார். அவரும் அவருடைய கூட்டத்தார் அனைவரும் தூபக் கலசத்தில் நெருப்பையும் தூபத்தையும் போட்டு ஆண்டவரின் திருமுன்னிலைக்கு வரப் பணிக்கிறார். ஆரோனும் தூபக் கலசத்தில்

நெருப்பையும் தூபத்தையும் போட்டு ஆண்டவரின் திருமுன்னிலைக்கு வருகிறார். அவர்கள் சந்திப்புக் கூடாரத்தின் நுழைவாயிலை அடைந்தபோது ஆண்டவரின் மாட்சி தோன்றுகிறது. ஆண்டவர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி ஒரு நொடியில் நான் இவர்களை எரித்துவிடும்படி இந்த மக்கள் கூட்டமைப்பிலிருந்து உங்களைப் பிரித்துக் கொள்ளுங்கள் (எண் 16: 21) என்கிறார். கிளர்ச்சியாளர்கள் மீது ஆண்டவர் கொண்டுள்ள கோபம் வெளிப்படையாகத் தெரிகிறது. இதற்குமுன் இஸ்ரயேல் மக்கள் தவறு செய்த நேரங்களில் மோசே கடவுளிடம் வேண்டியதுபோல இப்போதும் வேண்டுகிறார். மக்கள் கூட்டமைப்பை மன்னிக்கக் கேட்கிறார். ஆண்டவர் மோசேயின் வேண்டுதலைக் கேட்கிறார். மக்கள் கூட்டமைப்பு முழுவதையும் அழிக்க அவர் விரும்பவில்லை. எனவே மோசேயிடம், கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோரின் கூடாரத்தைவிட்டு அகன்று போகும்படி மக்கள் கூட்டமைப்பிடம் சொல் எனப் பணிக்கின்றார். மோசேயும் மக்களிடம் கூறுகின்றார்; அவர்களும் அவ்வாறே செய்கின்றனர். அதன்பின் நிலம் தன் வாயைத் திறந்து கோராகு, தாத்தான் மற்றும் அபிராம் ஆகியோர் அவர்கள் வீட்டாரோடும் கோராகைச் சேர்ந்த மனிதர்களோடும் அவர்கள் உடமைகளோடும் விழுங்குகிறது. ஆனால் கோராகுவின் மக்கள் அனைவரும் கொல்லப்படவில்லை. ஏனெனில் கிளர்ச்சியில் சேராதவர்கள் உயிர் தப்பினார்கள் (காண்க எண் 26:11; திபா 49). கோராகுடன் இணைந்து தூபக் கலசத்தில் நெருப்பையும் தூபத்தையும் இட்ட இருநூற்றைம்பது பேரும் கடவுளுடைய நெருப்பால் அழிக்கப்பட்டார்கள் (எண் 16:35). ஆரோனின் மகன்களான நாதாபும் அபிகூவும் தம் தூபக் கலசத்தை எடுத்து அதில் நெருப்பையும் தூயத்தையும் இட்டு ஆண்டவர் கட்டளைக்கு எதிராக தூயகத்திற்குள் நெருப்பைக் கொண்டுசெல்ல முயற்சித்தபோது ஆண்டவரிடமிருந்து நெருப்பு வந்து அவர்களை விழுங்கியது இங்கே நினைவு கூரத்தக்கது (காண்கலேவி 10:2).

கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதை மக்கள் கூட்டமைப்பினால் ஏற்க முடியவில்லை. ஏனெனில் பெரும்பாலானவர்கள் அவர்களை ஆதரித்தார்கள். எனவே அவர்கள், மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்து,ஆண்டவரின் மக்களை நீங்கள் கொன்றுவிட்டீர்கள் (எண் 16:41) என்று குற்றம் சாட்டுகின்றனர். ஆண்டவர் மீண்டும் மக்கள் கூட்டமைப்பின்மீது கோபம் கொள்கிறார். அவர்களை முழுவதுமாக அழித்தொழிக்க விரும்புகிறார். அவர்கள் மீது கொள்ளை நோயை ஏவிவிடுகிறார். மக்கள் நடுவில் கொள்ளைநோய் தொடங்கிவிட்டது. இதைப் பார்த்த

மோசே ஆரோனிடம், உன் தூப கலசத்தைப் பலிபீடத்திலிருந்து எடுத்து அதில் நெருப்பையும் தூபத்தையும் போட்டு விரைவாக அதனை மக்கள் கூட்டமைப்பினரிடம் கொண்டுபோய் அவர்களுக்காகக் கறை நீக்கம் செய்; ஆண்டவரிடமிருந்து கடுஞ்சினம் புறப்பட்டுவிட்டது கொள்ளைநோய் தொடங்கிவிட்டது எனக் கூறி அனுப்புகின்றார். ஆரோனும் மோசே கூறியபடி செய்கின்றார். கொள்ளைநோய் நிற்கிறது. ஆனால் அதற்குள் கொள்ளைநோயால் பதினாலாயிரத்து எழுநூறு பேர். இறக்கின்றனர். ஆரோனுக்கும் அவரது வழிமரபினருக்கும் கொடுக்கப்பட்ட குருத்துவம் நிலையானது என்பதைக் காட்டுவதற்காகவும், ஆரோனின் குருத்துவத்திற்கு எதிராக வேறு எவரும் கிளர்ந்தெழாவண்ணமும் இன்னுமொரு நிகழ்வை ஆண்டவர் நடத்திக் காட்டுகின்றார். மோசே மக்களிடம் பேசி, மூதாதையர் குலம் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோல் வீதம் அவர்கள் தலைவர்களிடமிருந்து பெற்று, அவர்களின் பெயரை எழுதி சந்திப்புக் கூடாரத்தில் உடன்படிக்கைப் பேழையின் முன் வைக்கின்றார். மறுநாள் ஆரோனின் கோல் துளிர் விட்டிருந்தது; அது துளிர்த்துப் பூத்து வாதுமைப் பழங்களைத் தாங்கியிருந்தது (எண் 17:10). இந்நிகழ்வின் மூலம் ஆரோனின் குருத்துவம் நிலைநிறுத்தப்படுகிறது; மற்றும் குருக்கள் அல்லாதவர்கள் திருஉறைவிடத்தை நெருங்கி வருவதும் தடுக்கப்படுகிறது.

கோராகுவும் அவரைச் சார்ந்தவர்களும் செய்த கிளர்ச்சியும் ஆண்டவர் அவர்களுக்கு அளித்த தண்டனையும் மக்கள் நடுவில் அச்சத்தை உருவாக்குகிறது. ஆரோனின் கோல் துளிர்த்து, காய்த்ததும் இந்த அச்சத்தை அதிகரிக்கச் செய்கிறது. மக்களின் அச்சத்தைப் போக்குவதற்காக ஆண்டவர் ஆரேன் மூலமாக சில அறிவுரைகளை மக்களுக்குக் கூறுகிறார். எண் 18 வது பிரிவில் நாம் இந்த அறிவுரைகளை வாசிக்கிறோம். முதலாவதாக, லேவியர்களும் குருக்களும் பிரித்துக் காட்டப்படுகிறார்கள். அவர்களுக்கான பணிகள் தெளிவாகப் பிரிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன. திருஉறைவிடம் முழுவதும் ஆரோன், அவரது புதல்வர்கள் மற்றும் லேவியர் குலத்தைச் சார்ந்தவர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். ஆனால் குருத்துவப்பணி ஆரோன் மற்றும் அவரின் புதல்வர்களுக்கு மட்டுமே உரியது. திருஉறைவிடத்தில் செய்யவேண்டிய குருத்துவப் பணிகளைச் செய்வதும், குருத்துவத்தின் தூய்மையைப் பாதுகாப்பதும் ஆரோன் மற்றும் குருக்களாகிய அவரது மகன்களின் பொறுப்பாகும். லேவியர் குலத்தைச் சார்ந்த மற்றவர்கள் சந்திப்புக் கூடாரத்தைப் பராமரிப்பதிலும், பாதுகாப்பதிலும் ஈடுபடவேண்டும். திருத்தூயகத்தில் பணிபுரியும் குருக்களுக்குத் தேவையான உதவிகள் புரிவதும் அவர்களின் பணியாகும்.

ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள பணிகளை மட்டுமே அவர்கள் செய்யவேண்டும். பணிகளைச் செய்வதில் யாரும் எல்லை மீறக்கூடாது. எண் 18 வது பிரிவு பலிகளில் குருக்களுக்கான பங்குகள் மற்றும் லேவியருக்கான பங்குகள் பற்றியும் பேசுகிறது. எண் 18 வது பிரிவில் வருகின்ற சட்டங்கள் கோராகு, தாத்தான் மற்றும் ஆபிராம் ஆகியோரின் கிளர்ச்சிக்கு எதிர்வினையாக உள்ளன என்பதில் சந்தேகமில்லை. கோராகுவின் கிளர்ச்சி குருத்துவத்தை அபகரிப்பதற்காகச் செய்ததாகும். லேவியர்கள் அனைவருக்கும் குருத்துவம் பொதுவானது என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அந்தக் கிளர்ச்சி செய்யப்படுகிறது. எனவே கோராகு மற்றும் அவரோடு சேர்ந்தவர்களின் இறப்பிற்குப் பிறகு கொடுக்கப்படுகின்ற சட்டங்கள் குருக்களை லேவியர்களிலிருந்து பிரித்துக் காட்டுகிறது. அவர்களுக்கான பணிகள் தெளிவாக பிரிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன (எண் 18).

எண் 19 வது பிரிவு தீட்டகற்றும் தண்ணீர் தயாரிப்பதுபற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றியும் பேசுகிறது. கோராகு, தாத்தான் மற்றும் அபிராம் ஆகியோரின் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு ஆண்டவர் கொள்ளைநோயை ஏவிவிட்டது நமக்குத் தெரியும். கொள்ளைநோயினால் ஏராளமான இஸ்ரயேல் மக்கள் இறக்கின்றனர். இறந்த உடல்களைத் தொட்டு பலர் தீட்டுப்பட்டவர்கள் ஆகின்றார்கள். எனவே ஆண்டவர் இறந்த பிணங்களைத் தொடுவதால் வருகின்ற தீட்டிலிருந்து தூய்மைப்படுத்துவதற்காக தீட்டகற்ம் தண்ணீர் செய்வதற்கான வழிபாடு கொடுக்கப்படுகிறது. தீட்டகற்றும் தண்ணீரைச் செயவ்தற்காக பழுதற்ற செங்கிடாரி ஒன்று பலியிடப்படுகிறது (எண் 19:1–10). தீட்டகற்றும் தண்ணீர் திருஉறைவிடத்தின் மீதும், அதிலுள்ள பொருள்களின் மீதும், பிணத்தைத் தொட்டதால் தீட்டான மனிதர்மீதும் தெளிக்கப்பட்டு தூய்மையாக்கப்படும் (எண் 19:14–19). ஒரு பிணத்தைத் தொட்டதால் ஏற்படும் தீட்டு அகற்றப்படுவது மிகவும் அவசியமானதாகக் கருதப்பட்டது. தீட்டகற்றும் தண்ணீரால் கழுவப்பட்டு தீட்டகற்றப்படாதவர்கள் எப்போதும் தீட்டானவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் கூட்டமைப்பிலிருந்து விலக்கிவைக்கப்படவேண்டும். அவ்வாறு விலக்கிவைக்கப்படவில்லை என்றால் அவர்கள் தங்கியிருக்கும் பாளையத்தையும், பாளையத்தில் அமைந்திருக்கும் கடவுளின் திருஉறைவிடத்தையும் தீட்டானதாக மாற்றுகிறார்கள்.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf

# ஞாயிறு மறையுரை



அருட்பணி.ஜஸடின சேவிய் ராஜ்
பங்குத்தந்தை, புனித.திருக்குடும்ப ஆலயம், பெருந்துறை, கோவை மறைமாவட்டம்

## பொதுக்காலம் 12ம் வாரம் ஞாயிறு

25.06.2023

எரேமியா 20/10-13- உரோமையர் 5/12-15 - மத்தேயு 10/26-33

அச்சம் என்பது மடமையடா

இறையேசுவில் அன்புக்கு உரியவர்களே, சுவாமி விவேகானந்தர் வாழ்வில் நடந்த நிகழ்வு. இதை அவர் தம் நூலில் பதிவு செய்துள்ளார். படைத்தளபதியான ஸ்ட்ராங் என்ற பெருடைய எனது ஆங்கிலேய நண்பர் சிப்பாய்க் கலகமம் நிகழ்ந்தபோது இந்தியாவில் இருந்தார். அதுபற்றி அவர் கதைகதையாகச் சொல்வது உண்ட. போதிய அளவுகு பீரங்கிகள், வெடிமருந்துகள், தேவையான மற்ற பொருட்கள் அனைத்தும் இருந்ததுடன், பயிற்சிபெற்ற போர்வீரர்களாக இருந்தும், சிப்பாய்கள் ஏன் அப்படித் தோல்வி அடைந்தார்கள் என ஒருநாள் நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் கூறினார், தளபதிகள் தலைமை தாங்கி முன்னே செல்லாமல் பின்னே வசதியான இடத்தில் இருந்துகொண்டு, வீரர்களே முன்னேறுங்கள், தாக்குங்கள் என்றெல்லாம் ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தனர். தளபதி முன்வந்து மரணத்தை எதிர்கொள்ளாவிட்டால், சாதாரண படைவீரர்கள் போரிடுவார்களா என்ன? எல்லாத் துறைகளிலும் இதுதான் நிலைமை. தளபதி தலை கொடுக்கவும் தயாராக இருக்க வேண்டும். தலையைக் கொடுக்க முடியுமானால் மட்டுமே தலைவனாக முடியும். ஆனால் நாமோ தியாகமோ, வேதனையோ எதவும் இல்லாமல் தலைவனாக விரும்புகிறோம். அதனால்தான் எதுவும் நடக்கவில்லை. நம்மை யாரும் பொருட்படுத்துவதில்லை.

பொதுவாகச் சொல்வார்கள், ஒரு குடம் பாலால் நிரப்பப்பட்டிருந்தால், து பால்குடம். தயிரால் நிரப்பப்பட்டிருந்தால் அது தயிர்குடம் என்ற பெயரைப் பெறுகிறது. அதுபோலத்தான் கோழை, மாவீரன், கஞ்சன், கொடை வள்ளல், முரடன், பயந்தாங்கொள்ளி என்று யாருமே இல்லை. ஒருவனின் எண்ணங்கள் கோழையானால் அவன் கோழை என்று பெயர் பெறுகிறான். அவனின் எண்ணங்கள் தைரியத்தால் நிரப்பப்பட்டிருந்தால், அவன் தைரியசாலியாகிறான். அச்சத்தால்


நிரப்பப்பட்டிருந்தால் அவன் பயந்தவனாகிறான். நம் எண்ணங்கள் எப்படி இருக்கிறதோ அப்படிப்பட்டவர்களாகவே நாம் மாறுகிறோம்.

கிறிஸ்வின் வருகைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன் எருசலேமில் வாழ்ந்தவர் எரேமியா. அன்று இஸ்ரயேல் அரசு பாபிலோனிய பேரரசுக்குக் கப்பம் கட்டி வாழ்ந்தது. இதை விரும்பாத அவ்வினம் எகிப்துடன் இணைந்து பாபிலோனிய அடிமை வாழ்வை முறியடிக்கத் திட்டம் தீட்டியது. எகிப்தியருடன் கூட்டுச் சேர்வதைக் கண்டித்தார் எரேமியா. இதனால் எருசலேம் நகரம் அழிக்கப்பட்டு யூதர்கள் பாபிலோனியா நாட்டில் பரதேச வாழ்வு வாழ்வர் என்று இறைவாக்கு உரைத்தார். இதை ஏற்காத யூத குருக்களும், தலைவர்களும் இவரைச் சிறையிலடைத்தனர். பாழங்கிணற்றில் தள்ளினர். இவரைப்போல் வேறு எந்த இறைவாக்கினர்களும் துன்பப்படவில்லை எனலாம்

நம்முடைய வாழ்க்கைக்கு வருவோம். அடிவருடியாய் வாழ்ந்தால் ஆனந்தம் இருக்கும். கப்பம் கட்டினால் சிம்மாசனம் கிடைக்கும். இறைவாக்கு உரைத்தால் நாம் காணாமல் போய்விடுவோம். தொலைக்கப்பட்டுவிடுவோம். பிழைப்பது எளிது வாழ்வது கடினம்.

இயேசு தம் சீடர்கள் பிழைப்பதை விரும்பவில்லை. வாழ்வதை விரும்புகிறார். காரணம் இயேசு பிழைக்கவில்லை, மாறாக வாழ்ந்தார். வாழ விரும்பும்போது, இயற்கைத் துன்பங்களும், செயற்கைத் துன்பங்களும் நமக்குச் சொந்தமாகும். ஆதாயத்துக்காக நாக்கைத் தொங்கப்போடப் போகிறோமா? அல்லது துணிந்தவனுக்குத் தூக்கு மேடை பஞ்சு மெத்தை என்ற உணர்வைப் பெற விரும்புகிறோமா?


எதர்ப்புகளும், இடர்பாடுகளும் நம் இலட்சியத்தை ஒன்று செய்துவிட முடியாது. வானத்துப் பறவைகளைவிட, வயல்வெளி மலர்களைவிட இறைவன் பார்வையில் நாம் விலையேறப் பெற்றவர்கள். எனவே பிழைக்காமல்....வாழ்வோம்...ஆமென்





# பொதுக்காலம் 12-ஆம் ஞாயிறு

எரே. 20:10-13,
உரோ. 5:12-15, மத். 10:26-33



பா. சேவியர்
திண்டுக்கல்

**25-06-2023**

## திருப்பலி முன்னுரை

இறைவனின் பராமரிப்பை உணர்ந்து, அவரது அருளை நிறைவாய்ப் பெற்று மகிழ வருகை தந்துள்ள சிட்டுக்குருவிகளைவிட மேலான விலையேறப்பட்டவர்களான அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 12- ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இறைவார்த்தையை அனைவரும் அறிவிக்க வேண்டும், இயேசுவின் சாட்சிகளாய் வாழ வேண்டும் என்ற அழைப்பினை விடுக்கிறது இன்றைய வழிபாடு.

அஞ்சாதீர்கள் ஆண்டவர் என்றும் நம்மோடு என்ற சிந்தனையையும், நாம் யாருக்கு அஞ்ச வேண்டும், யாருக்கு அஞ்சக்கூடாது என்ற வழிகாட்டலையும், இறைவன் நமது அச்ச உணர்வைப் போக்கி விடுதலையைத் தருகிறார் என்ற நம்பிக்கையையும் இன்றைய வாசகங்கள் வழங்குகின்றன.

உடல் அழிவுக்குரியது. நிரந்தரமானது அல்ல. அதற்கு தொடக்கமும் முடிவும் உண்டு. ஆனால் ஆன்மா அழியாதது. அது இறைவனுக்குச் சொந்தமானது. அத்தகைய ஆன்மாவைத் தீமைகளிலிருந்தும் பாவத்திலிருந்தும் பாதுகாக்கவும், நாம் என்றும் இறைவனின் பராமரிப்பில் இருக்கவும், இறைவழியில் நடக்கவும் இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

நம் ஆண்டவரது கண்ணுக்கு நாம் விலையேறப்பட்டவர்கள், மதிப்புக்குரியவர்கள். எனவே இறைவனின் மாறா அன்பில் கலந்திட சிறப்பாக இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இறைவன் வலிமை மிகுந்த போர் வீரனைப்போல் தம்முடன் இருப்பதை எரேமியா உணர்கிறார். ஆண்டவர் ஏழைகளின் உயிரை தீயோர் கையினின்று விடுவிக்கிறார் என அவர் பாடும் இறைப் புகழை மகிழ்வுடனும் நம்பிக்கையுடனும் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆதாமையும் இயேசுவையும், பாவத்தையும் அருளையும் தூயபவுலடியார் ஒப்பீடு செய்கிறார். குற்றத்தின் தன்மை சாவை வருவிக்கிறது. அருட் கொடையின் தன்மை வாழ்வைத் தருகிறது என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அச்சம் போக்கி ஆறுதல் தருகின்ற அன்பின் இறைவா, உம் திருமகன் இயேசுவின் கனவை நனவாக்க, நாள்தோறும் நம்பிக்கையுடன் அருட்பணி ஆற்றி வருகின்ற உம் உண்மை சீடர்களான எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்தந்தையர், அருட்கன்னியர் யாவருக்கும் துன்பங்களை வெல்லும் உறுதியையும் மன வலிமையையும், ஆன்ம பலத்தையும், நல்ல உடல் நலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) வலிமை வாய்ந்த வீரரைப்போல் என்றும் எம்மோடு இருக்கும் அன்பு இறைவா, எங்கள் வாழ்வில் நாங்கள் எதிர்கொள்ளும் துன்ப துயரங்களைக் கண்டு துவண்டு விடாமல் நீர் என்றும் எமக்குப் பக்கபலமாக இருக்க வேண்டுமென்றும், பாவத்தைத் தவிர வேறு எதற்கும் அஞ்சாமல் வாழும் மன வலிமையைத் தந்தருள வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) அருள் தரும் வார்த்தைகளால் எம்மை அரவணைத்துக் காத்துவரும் அன்பு இறைவா, நாட்டு மக்களை துண்டாடி வரும் மதவாத அரசியல் முற்றிலுமாக ஒழிந்து, சமத்துவமும் சகோதரத்துவமும் சகிப்புத்தன்மையும் மதநல்லிணக்கமும் பெருகி, எமது தேசம் என்றும் அமைதிப் பூங்காவாய்த் திகழ்ந்திட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) அன்பும் இரக்கமும், கருணையும் கனிவும் கொண்ட தந்தையே இறைவா, உடல் நலமின்றி வாடும் ஒவ்வொருவரையும் உமது வல்லமையுள்ளத் திருக்கரத்தால் தொட்டுக் குணப்படுத்தும். நோயால் அவர்கள் படும் வேதனைகளில் இருந்து முற்றாக அவர்களை விடுவித்தருளும். அவர்களது உடலுக்கு ஆரோக்கியத்தையும், உள்ளங்களுக்கு ஆறுதலையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# திருத்தூதர்கள் பேதுரு, பவுல் பெருவிழா

**29-06-2020**

தி.ப. 12:1-11, 2 திமொ. 4:6-8, 17-18, மத்.16:13-19



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

தாய்த் திருச்சபையின் அடித்தளமாய், ஆதார சுருதியாய், அடி நாதமாய் விளங்கும் திருத்தூதர்கள் பேதுரு, பவுல் பெருவிழா திருப்பலிக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

பேதுருவும் பவுலும் கிறிஸ்துவ பாரம் பரியத்தில் நற்செய்தியின் முழு வடிவமாக, திருஅவையின் தூண்களாக உள்ளனர். இயேசு கிறிஸ்து வழங்கிய அதிகாரத்தின் அடிப்படையில் திருச்சபையின் முதல் தலைவராக செயல்பட்டவர் புனித பேதுரு. ஆண்டவரால் தடுத்தாட்கொள்ளப்பட்டு பிற இனத்தாரின் திருத்தூதராக விளங்கியவர் புனித பவுல்.

கிறிஸ்துவின்மேல் நாம் கொண்டுள்ள நம்பிக்கை மட்டுமே நம்மை மீட்க முடியும் என இருவருமே ஆணித்தரமாக போதித்தவர் கள். இருவருமே கிறிஸ்துவின் மேல் கொண்ட நம்பிக்கையின் பொருட்டே தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தவர்கள்.

பாகுபாடற்ற மனம், ஆழமான விசுவாசம், அதை வாழ்வாக்க உறுதியான உள்ளம் இவற்றையே இன்றைய விழா வழியாக இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

இயேசுவுக்காக அவரது மதிப்பீடுகளுக் காக துன்பங்களை அனுபவிக்க முன் வரும் போது நாமும் இயேசுவின் பாடுகளில் பங்கு கொள்கிறோம் என்ற உண்மையையும், கிறிஸ்தவ வாழ்வை பந்தய ஓட்டமாகக் கருதி எல்லையை அடையும் வரை துவண்டு விடாமல் ஓட வேண்டும் என்ற இலட்சியத் தையும் இன்றைய வழிபாடு வழங்குகிறது.

கிறிஸ்துவுக்காக உயிரையே இழக்கத் துணிந்த இந்த திருத்தூதர்களைப் பின்பற்றி இயேசுவின் சாட்சிகளாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

ஏரோதால் சிறையில் அடைக்கப்பட்ட பேதுருவை இறைவன் தனது திருத்தூதரைக் கொண்டு விடுவிக்கின்ற திருநிகழ்வு இன்றைய முதல் வாசகமாக வழங்கப்பட்டுள்ளது. திருச்சபைக்காக, திருமறைத் தலைவர்களுக்காக வேண்டிக்கொள்ளும் மன நிலையுடன் இவ்வாசகத்தைக் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இயேசுவுக்காக உழைத்து, வாழ்வின் முடிவுக்கட்டத்தில் இருக்கும் பவுல் பற்றி இன்றைய வாசகம் பேசுகிறது. தனது பணி பற்றியும், தனக்காகக் குறிக்கப்பட்டிருக்கும் இறுதி பரிசு பற்றியும் பவுலடியார் எடுத்துரைப்பதை கவனமுடன் கேட்போம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

காலம் உன்னைக் கரை சேர்க்காது
நீதான் நீந்திக் கரை சேரவேண்டும்

வரலாறு தோற்றவனையும் பதிவு செய்யும்
வென்றவனையும் பதிவு செய்யும்
ஒருபோதும்
போட்டியிடாதவனைப் பதிவு செய்யாது

தன்னை அடக்கத் தெரியாதவன்தான்
பிறரை அடக்கி ஆள நினைப்பான்

கடமை செய்பவனுக்குக் கடமைகள் இருந்துகொண்டே இருக்கும்
கவலைப்படுகிறவனுக்குக் கவலைகள் இருந்துகொண்டே இரக்கும்

பயத்தை பின்னால் தள்ளி
தைரியத்தை முன்னால் வைத்துச் செல்
துணிவே துணை

தகுதியில்லாதவனுக்குக்கூட புகழ் கிடைத்துவிடும், ஆனால்
சாதனையாளனுக்கு மட்டுமே பெருமை கிடைக்கும்
–ஷேக்ஸ்பியர்

எப்போதெல்லாம் எதிர்பார்ப்பில்லாமல்
கணக்குப்பார்க்காமல், பேரம் நிகழ்த்தாமல்
நேசிக்க முடிகிறதோ?
அப்போதெல்லாம்
நாம் சொர்க்கத்தில் இருக்கிறோம்.




**25.06.2023 - பொதுக்காலம் 12ம் வாரம் - ஞாயிறு**

எரேமியா 20/10-13
உரோமையர் 5/12-15
மத்தேயு 10/26-33

**26.06.2023 - பொதுக்காலம் 12ம் வாரம் - திங்கள்**

தொடக்க நூல் 12/1-9
மத்தேயு 7/1-5

**27.06.2023 - பொதுக்காலம் 12ம் வாரம் - செவ்வாய்**

தொடக்க நூல் 13/2, 5-18
மத்தேயு 7/6, 12-14

**28.06.2023 - பொதுக்காலம் 12ம் வாரம் - புதன்**

தொடக்க நூல் 15/1-2, 17, 18
மத்தேயு 7/15-20

**29.06.2023 - பொதுக்காலம் 12ம் வாரம் - வியாழன்**
**புனிதர்கள் பேதுரு, பவுல் - திருத்தூதர்கள் பெருவிழா**

திருத்தூதர் பணிகள் 12/1-11
2 திமொத்தேயு 4/6, 8, 17, 18.......மததேயு 16/13-19

30.06.2023 - பொதுக்காலம் 12ம் வாரம் - வெள்ளி

தொடக்க நூல் 17/1, 9, 10, 15-22

மத்தேயு 8/1-4

01.07.2023 - பொதுக்காலம் 12ம் வாரம் - சனி

தொடக்க நூல் 18/1-15


மத்தேயு 8/5-17

02.07.2023 - பொதுக்காலம் 13ம் வாரம் - ஞாயிறு

2 அரசர்கள் 4/8-11, 14-16

உரோமையர் 6/3, 4, 8-11

மத்தேயு 10/37-42



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 51

மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

### குறள் விளக்கம்

இல்வாழ்க்கைக்குஏற்றநற்பண்புஉடையவனாகித் தன் கணவனுடையபொருள் வளத்துக்குத் தக்கவாழ்க்கைநடத்துகிறவளே வாழ்க்கைத் துணைஆவாள்

### சிந்தனை

பல சிக்கலான பரிசோதனைகளை சுலபமாக செய்து பலவற்றைக் கண்டுபிடித்த விஞ்ஞானி அவர். என் வெற்றிக்கு காரணம் என் அம்மாதான் என்றார்.

சிறுவயதில் பாலைக் கொட்டிவிட்டால் அம்மா திட்டமாட்டார். அதில் விளையாட அனுமதிப்பார். அதன்பிறகு அந்த இடத்தைச் சுத்தம் செய்வார். அவரும் உதவுவார். தவறுகளால் குற்ற உணர்ச்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்வார். எனவே தவறுகளைத் தாண்டி ஆய்வு செய்யும் அறிவு வளர்ந்துள்ளது என்றார்.

பிள்ளைகள் செய்யும் தவறுகளும் அவர்களைத் தகுதிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களே!

மனைவி அமைவது கடவுள் கொடுத்த வரம் என்பர். நல்ல குணவதி மனைவியாக அமைந்து விட்டால் அமைதியான வாழ்க்கை கிடைத்துவிடும். வரவுக்கு ஏற்ற செலவு செய்யும் மனைவி அமைந்துவிட்டால் குடும்ப வாழ்க்கை வளம் பெறும். சிக்கனமாகச் செலவு செய்து சேமிக்கும் மனைவி அமைந்துவிட்டால் குடும்ப வாழ்க்கை சீர்படும். ஏனெனில், சிக்கனமே சிறந்த வருமானம்'ஆகும். வரவு எட்டனா செலவு பத்தனா என்ற வகையில் செலவு செய்தால் பிரச்சனைகளுக்கு பஞ்சமில்லாமல் குடும்ப வாழ்க்கை சீரழியும்.

ஒரு மனைவியிடம் விளங்கும் நன்னயம் அவள் கணவனை மகிழ்விக்கும்: அவளிடம் காணப்படும் அறிவாற்றல் அவன் எலும்புகளுக்கு வலுவூட்டும் சீஞா 26:13 என்கிறது திருவிவிலியம்.

ஒரு குடும்ப நலன் முழுவதும் குடும்பத் தலைவியின் கையில் தான் உள்ளது. அவளைப் பொருத்தே அக்குடும்ப நலன் அமையும் என்பது முற்றிலும் உண்மை.





அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm



திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்

# நலம் தரும் இயற்கை வளம்



நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.

இன்றைய நலத்தகவல்..!
தேனில் ஊறிய நாட்டுப் பூண்டு

இத்தனை பலன்களா..!!
உடல் நலனுக்கு அஞ்சுவோர்
இன்று அதிகம்.
எங்கே தன்னை நோய் பாதித்து விடுமோ என்கிற பயத்திலேயே
பல்வேறு உணவுகளை தவிர்ப்பதும்
பிடிக்கவில்லை என்றாலும்
வலுக்கட்டாயமாக எடுத்துக் கொள்வதும் தொடர்கிறது.
நாம் சாப்பிடும் உணவில் தான் உடல் ஆரோக்கியம் அடங்கியிருக்கிறது.
அதோ நம் உடலில் ஏற்படும் பல்வேறு இடர்பாடுகளை
நாம் அன்றாடம் சாப்பிடும் உணவுகளிலிருந்தே தவிர்க்க முடியும்.
தினமும் காலையில் தேனில் ஊறிய நாட்டுப் பூண்டு சாப்பிடுவதால்
உடலுக்கு என்னென்ன நன்மைகள் ஏற்படும் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

மருந்து :
நாம் அன்றாடம் சமையலுக்கு பயன்படுத்துகிற பொருட்களைக் கொண்டே மருத்துவம் பார்க்கப்பட்டது.
நாட்டுப் பூண்டு மற்றும் தேன் இரண்டையும் மிகச்சிறந்த மருந்தாகப் பயன்படுத்தி வந்தனர்.
அதேபோல் எகிப்துஇ சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலும்
இவையிரண்டும் சிறந்த மருந்துப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது

## தயாரிப்பு முறை :

உங்களுக்கு தேவையான அளவு
நாட்டுப் பூண்டு எடுத்து நன்றாக தோல் சீவி பொடியாக நறுக்கிக் கொள்ளுங்கள்.
கண்ணாடி பாட்டிலில் அதனைப் போட்டு
நாட்டுப் பூண்டு மூழுகும் அளவுக்கு தேன் ஊற்ற வேண்டும்.
குறைந்தது ஒரு நாள் முழுவதுமாவது பூண்டு தேனில் ஊறவேண்டும்.
இதற்கு கலப்படமில்லாத தூய தேன் வாங்குவது சிறந்தது.

## சாப்பிடும் முறை :

தினமும் காலையில் அரை ஸ்பூன் அல்லது 4 பூண்டு பற்கள் அளவுக்கு சாப்பிட்டு வந்தாலே போதுமானது.
ஒரு நாளைக்கு இரண்டு முறை அளவு எடுத்து சாப்பிடலாம்.
ஆனால் . உணவு உண்டபிறகு இதை உட்கொள்வது நல்லது

## வைரஸ் காய்ச்சல் :

பாக்டீரியாஇ வைரஸ் மூலம் பரவும் காய்ச்சல்இ இருமல்இ தொற்றுநோய்கள்இ காயங்கள் போன்றவற்றை தவிர்க்க முடியும்.
நாட்டுப் பூண்டு இன்ஸுலின் சுரப்பை அதிகரிப்பதால்
சர்க்கரை நோயாளிகள் தாரளமாக எடுத்துக் கொள்ளலாம்.

## நோய் எதிர்ப்பு சக்தி :

பூண்டில் அலிசின் என்ற ஆன்டிஆக்சிடண்ட் உள்ளது.
இந்த சத்துஇ உடலில் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.
இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ராலை குறைப்பதில் பூண்டு முதன்மையானது.
அதைத் தவிர அஜீரணம்இ வாயுத்தொல்லைஇ ரத்த அழுத்தம் போன்றவற்றையும் நீக்க பெரிதும் உதவுகிறது.

## மாரடைப்பு :

வயது ஏற ஏறஇ விரிவடையும் திறனை தமனிகள் இழக்கத் தொடங்குகிறது.
இதனை குறைக்க மலைப் பூண்டு முக்கியப் பங்காற்றுகிறது.
மேலும்இ ஆக்சிஜன் இயக்க உறுப்புகளால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்தும் இதயத்தை காக்கும்.
மலைப் பூண்டு உள்ள சல்பர் கலந்த பொருட்கள்இ
இரத்த குழாயில் அடைப்பு ஏற்படாமல் தடுக்கும்.
அதே போல பூண்டில் உள்ள அஜோனின் இரத்த உறைதல் எதிர்ப்பி குணங்களால்இ இதயத்திற்குள் இரத்த கட்டிகள் உருவாகாமல் தடுக்க உதவும்.

**அலர்ஜி :**
டையாலில் சல்பைடு மற்றும் தியாக்ரெமோனோன் ஆகியவை
நாட்டுப் பூண்டு இருப்பதால் அவை அலர்ஜியால் ஏற்படும் ஒவ்வாமைகளை தடுத்திடும்.
அலர்ஜியால் ஏற்படும் சுவாசப் பிரச்சனைகளைக் கூட
பூண்டு எளிதாக தீர்க்கிறது.

**செரிமானம் :**
நாம் உண்ணும் உணவுகள் இரைப்பையில் சென்று சேருகிறது.
அங்கு ஜீரண உறுப்புகளெல்லாம் ஒன்று சேர்ந்து உணவை ஜீரணித்து
பலவித சத்துக்களைத் தனித்தனியாகப் பிரித்துஇ
பின்பு உடல் முழுவதும் அனுப்புகின்றன.
இந்தப் பணியினை இரைப்பை மிகச் சிறப்பாகச் செய்கிறது.
இந்த இரைப்பையின் பணி சீராக நடப்பதற்கு தேன் மிகவும் உதவுகிறது.

**பல்வேறு பிரச்சனைகள் :**
நாட்டுப் பூண்டுல் உள்ள
இரும்புஇ தாமிரம்இ மங்கனீசுஇ பொட்டாசியம் போன்ற சத்துக்கள் உள்ளதால்
நல்ல இரத்த விருத்தி ஏற்படும் இதனால் வயிறு மந்தமாக இருப்பதுஇ
சோர்வுஇபசியின்மை போன்ற பிரச்சனைகளை இது தீர்த்திடும்.
இருதயத் தசைகளுக்குப் போதுமான இரத்தம் இன்மையால் ஏற்படும் வலிஇ
தொற்று நோய்க் கிருமிகளால் உண்டான காய்ச்சல்இ
மூளைக்கு அதிக வேலை கொடுத்ததால் ஏற்பட்ட சோர்வுஇ கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் காலை நேரத் தொல்லைகள்இ ஹைபோக்ளைசீமியா எனப்படும்
இரத்தத்தில் சர்க்கரைச் சத்து குறைந்த நிலை போன்றவைகளுக்குத் இது மிகுந்த பயனுள்ளது.

**கொழுப்பு :**
தேன் மற்றும் மலைப் பூண்டு இரண்டிலுமே கொழுப்பை கரைக்ககூடிய ஆற்றல் இருக்கிறது.
இவற்றை தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவதால் அந்த என்சைம்கள் நம் உடலுக்குள்ளும் சென்று கொழுப்பை கரைத்திடும்.
உடல் எடையை குறைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் தாரளமாக இதனைச் சாப்பிடலாம்.

**ரத்த சோகை :**
உடலில் போதுமான ரத்த அளவு இல்லாமல் இருப்பவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகவே விளங்குகிறது.

தேன் ரத்தம் விருத்தியடையச் செய்கிறது.
தினமும் வெறும் வயிற்றில் தேனில் ஊறிய நாட்டுப்பூண்டினை சாப்பிடுவதால் இரட்டிப்பு பலன் கிடைக்கும்.
அதோடு இது நரம்புத் தளர்ச்சியையும் சரி செய்கிறது.

## இருமல் :

சிலருக்கு லேசாக தட்பவெட்பம் மாறினாலே தொடர் இருமல் வந்திடும்.
அல்லது சிலருக்கு உடல் வறட்சியாலோ அதிக சூட்டினாலோ இருமல் வரும்.
அவர்கள் தேனில் ஊறிய நாட்டுப்பூண்டினை சாப்பிட்டால் நல்ல பலன் கிடைத்திடும்.
சளியினால் ஏற்ப்பட்ட இருமலாக இருந்தால் மருத்துவரிடம் காண்பிப்பது தான் நல்லது.

## பாரம்பரியம் :

பண்டைய காலம் முதலே நாட்டுப்பூண்டு வெறும் உணவாக இன்றிஇ மருத்துவ பொருளாக தான் பயன்படுத்தி வரப்படுகிறது.
எகிப்தில் இருந்து நமது தமிழ் கலாச்சாரம் வரை பூண்டை ஓர் மருத்துவ பொருளாக தான் பயன்படுத்தியுள்ளனர்.
பண்டைய கிரேக்கத்தில் விளையாட்டு மற்றும் போர் வீரர்களின் உடற்திறனை மேம்படுத்து பூண்டை பயன்படுத்தி வந்துள்ளனர்.
அதில் நாட்டுப் பூண்டு அதனுடைய தன்னிகரற்ற குணங்களினால் அனைத்து மக்களாலும் விரும்பி பயன்படுத்த படுகிறது.
நாட்டுப் பூண்டு அதிக காரத்தன்மை உடையவை.
ஒரு முறை பயன்படுத்தினால் போதும் அதன் சிறப்பு உங்களுக்கு புரியும்.
மருத்துவ குணம் நிறைந்தது அதிக சிறப்பு வாய்ந்த பூண்டு
சித்தமருத்துவம் நாட்டு மருத்துவத்தில் முக்கிய பங்கு வகிப்பது
ஒரு வருடம் ஆனாலும் கெடாது அதிக காரத்தன்மை கொண்டது
குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு பால் பெருக்கியாக மிக சிறப்பாக உதவுகிறது
இனிமேல் பிறந்த குழந்தையையும் தாயையும் பார்க்க செல்லும் போது
பூஸ்ட் ஹார்லிக்ஸ் பழங்கள் என வாங்கிச் செல்வதை தவிர்த்து
நாட்டுப்பூண்டை வாங்கிச் செல்லுங்கள்
வாயு பிரச்சனைக்கு தீர்வு
குழந்தைகள் பெரியவர்கள் என அனைவருக்கும்
நோய் எதிர்ப்பு சக்தியை தரக்கூடியது
இரவு வேலையில் பாலில் மூன்று பூண்டு பல் போட்டு காயச்சி பனங்கற்கண்டு சேர்த்து
இரவு குடித்தால் காலையில் வயிறு குடல் சுத்தமாகும் ஜீரண சக்தி அதிகரிக்கும்
உடலில் உள்ள நச்சுத்தன்மை வெளியேற உதவும்.
நன்றி உறவுகளே..!
என்றும் உங்கள் அன்பு சகோதரன்.
ஜே. அன்புரோஸ்.
நலநெறியாளன், 9360456063